RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 137 | மே.23, 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## டாஸ்மாக் முறைகேடு வழக்கு: அறிக்கை தாக்கல் செய்ய தமிழக அரசுக்கு ஐகோர்ட் உத்தரவு



சென்னை: மே.23-

டாஸ்மாக்கில் நடந்த ஆயிரம் கோடி ரூபாய் முறைகேடு தொடர்பாக பதிவு செய்யப்பட்டுள்ள 41 வழக்குகளின் நிலை குறித்த அறிக்கையை தாக்கல் செய்ய தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், பாளையங்கோட்டையைச் சேர்ந்த வழக்கறிஞர் வெங்கடாசலபதி என்பவர் தாக்கல் செய்த பொது நல மனுவில், "தமிழகத்தில் டாஸ்மாக் கடைகளில் மதுபானங்களை அதிக விலைக்கு விற்பனை செய்தது, பார் உரிமம் வழங்கியது உள்ளிட்டவற்றில் ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு முறைகேடுகள் நடந்துள்ளதாக புகார் கூறப்பட்டது. இதுதொடர்பாக, கடந்த 2017 முதல் 2024 வரையிலான காலகட்டத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை பதிவு செய்த 41 வழக்குகளின் அடிப்படையில் அமலாக்கத் துறையினர், சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து, டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் கடந்த மார்ச் மாதம் சோதனை நடத்தினர்.

இந்நிலையில், இந்த முறைகேடுகள் தொடர்பாக டாஸ்மாக் மற்றும் அதன் அதிகாரிகளுக்கு எதிராக லஞ்ச ஒழிப்புத்துறை பதிவு செய்துள்ள வழக்குகளை சிபிஐ விசாரணைக்கு மாற்றி உத்தரவிட வேண்டும். அமலாக்கத் துறை விசாரணையை முடக்கும் நோக்கில் மாநில அரசு செயல்படுகிறது. ஆயிரம் கோடி ரூபாய் முறைகேடு வழக்கை நியாயமாகவும், எந்த இடையூறும் இன்றி விசாரிக்க வேண்டும் எனவே சிபிஐ விசாரணைக்கு மாற்ற வேண்டும். டாஸ்மாக் அதிகாரிகளுக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளை விசாரிக்க மாநில அரசுக்கு தடை விதிக்க வேண்டும்." என மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன் மற்றும் வி.லட்சுமி நாராயணன் அடங்கிய அமர்வில் இன்று (மே 22) மீண்டும் விசாரணைக்கு வந்தது. தமிழக அரசுத்தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன், "வழக்குகளை வேறு விசாரணை அமைப்புகளுக்கு மாற்றுவது தொடர்பான வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பு வாதங்களை கேட்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 41 வழக்குகளிலும் டாஸ்மாக் நிர்வாகம் தான் புகார்தாரர் என்பதால், குற்றம் சாட்டப்பட்டவர்களை எதிர்மனுதாரர்களாக சேர்க்க வேண்டும்." எனக் கேட்டுக் கொண்டார்.

இதையடுத்து, "குற்றம் சாட்டப்பட்டவர்களை சேர்க்கும் வரை டாஸ்மாக் முறைகேடு தொடர்பான வழக்குகள் முடிக்கப்பட மாட்டாது என உத்தரவாதம் அளிக்கப்படுமா?" என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். அப்போது தலைமை வழக்கறிஞர், "வழக்கை முடிப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட கீழமை நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்ய வேண்டும். கீழமை நீதிமன்றம் தான் இது தொடர்பாக முடிவெடுக்கும். இருப்பினும், அடுத்த விசாரணை வரை டாஸ்மாக் முறைகேடு தொடர்பான எந்த வழக்கையும் முடிக்க கோரி கீழமை நீதிமன்றங்களில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டாம் என உள்துறை செயலாளருக்கு அறிவுறுத்துவதாக." தெரிவித்தார்.

இதை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், டாஸ்மாக் முறைகேடு தொடர்பான வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்களை சேர்க்க மூன்று வாரங்கள் மனுதாரருக்கு அனுமதி வழங்கி உத்தரவிட்டனர். மேலும், டாஸ்மாக் முறைகேடு தொடர்பாக பதியப்பட்ட 41 வழக்குகளின் நிலை குறித்த அறிக்கையை தாக்கல் செய்ய உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை மூன்று வாரங்களுக்கு தள்ளிவைத்தனர்.

## போராட்டங்களால் மட்டுமே பெண்களுக்கான நீதி கிடைக்கும் என்ற நிலை இருக்கக் கூடாது: தமிழிசை வலியுறுத்தல்



சென்னை: மே.23-

தமிழகத்தில் போராட்டங்களினால் மட்டுமே பெண்களுக்கான நீதி கிடைக்கும் என்ற நிலை இருக்கக் கூடாது என்று தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

பாஜக மாநில முன்னாள் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் வெளியிட்டுள்ள வீடியோ பதிவில் கூறியிருப்பதாவது: அரக்கோணத்தை சேர்ந்த ஒரு பெண் கடந்த 9ம் தேதியில் இருந்து பரிதவித்துக் கொண்டிருக்கிறார். திமுக இளைஞரணியைச் சேர்ந்த ஒருவர் தன்னை திருமணம் செய்து கொண்டு, பலருக்கு தன்னை விருந்தாக்க முயற்சி செய்வது மட்டுமல்லாமல், பெண்களை வைத்து இதேபோல பல கொடூரமான முயற்சிகளை செய்து கொண்டிருக்கிறார் என்றும், ஏறக்குறைய 20 பெண்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அந்தப் பெண் குற்றம்சாட்டி உள்ளார்.

இது தொடர்பாக பல காவல் நிலையங்களில் புகார் அளித்தும், அந்த பெண்ணுக்கு நீதி கிடைக்கவில்லை. தற்போது வரை ஒவ்வொரு காவல் நிலையமாக ஓடிக் கொண்டிருக்கிறார். பொள்ளாச்சி வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்களின் அடையாளம் வெளியே தெரியாமல் அந்த வழக்கு நடந்தது. ஆனால், திமுக ஐடி விங்கைச் சார்ந்தவர்கள், தனது அடையாளத்தை வெளியிடுகிறார்கள் என்கிறார் அந்த பெண்.

என்னென்ன கொடுமைகளை எல்லாம் அந்த பெண் அனுபவித்தார் என்று காவல் நிலையத்தில் அந்த பெண் கூறினாரோ, அதையெல்லாம் திமுக ஐடி விங்கை சார்ந்தவர்கள் வெளியிட்டுள்ளனர். இதனால், முதலில் இருந்த துணிச்சல் இப்போது இல்லை என அவர் கூறுகிறார்.

திமுக அரசு பெண்களுக்கு என்ன பாதுகாப்பை கொடுக்கிறது? பெண்களுக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டிய முதல்வர் ஸ்டாலின் என்ன பதில் சொல்லப் போகிறார்? தயவு செய்து பெண்களுக்கு பாதுகாப்பு கொடுங்கள். ஓங்கி ஒலிக்கும் பெண்களின் குரலை செவிமடுத்துக் கேளுங்கள். அவர்களின் அடையாளங்களை சொல்லி அவர்களை பரிதவிக்க விடாதீர்கள். அவர்களுக்கு நியாயம் வழங்குங்கள்.

அரக்கோணம் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அந்தப் பெண்ணை அழைத்து, அவருக்கு நியாயம் கிடைக்கச் செய்ய வேண்டும். பெண்களுக்கான நீதி போராட்டங்களினால் மட்டும்தான் கிடைக்கும் என்ற நிலை தமிழகத்தில் இருக்கக்கூடாது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## "முப்படைகள் உருவாக்கிய சக்கரவியூகத்தால் பாகிஸ்தான் மண்டியிட்டது" பிரதமர் மோடி




பிகானீர்: மே.23-

பஹல்காமில் தாக்குதல் நடத்தியவர்களுக்கும் அவர்களுக்கு பின்னால் இருந்தவர்களுக்கும் கற்பனை செய்ய முடியாத தண்டனை வழங்கப்படும் என்ற தீர்மானத்தை தாங்கள் நிறைவேற்றி இருப்பதாகத் தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, நாட்டின் முப்படைகளும் ஒரு சக்கரவியூகத்தை உருவாக்கியதால் பாகிஸ்தான் மண்டியிட்டது என குறிப்பிட்டுள்ளார்.

ராஜஸ்தானின் பிகானீர் நகரில் நடைபெற்ற விழாவில், ரூ.26,000 கோடி மதிப்பிலான மேம்பாட்டுத் திட்டங்களை தொடங்கிவைத்து பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். அப்போது அவர், "ரூ. 26,000 மதிப்புள்ள மேம்பாட்டுத் திட்டங்கள் இன்று தொடங்கி வைக்கப்பட்டன. வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க, ஒரு 'மகாயக்ஞம்' இந்தியாவில் நடந்து வருகிறது. உள்கட்டமைப்பு பணிகளுக்கு முன்பை விட ஆறு மடங்கு அதிக பணம் செலவிடப்படுகிறது.

இன்று, இந்தியா தனது ரயில்வே வலையமைப்பை நவீனமயமாக்கி வருகிறது. வந்தே பாரத், அமிர்த பாரத் மற்றும் நமோ பாரத் ரயில்கள் நாட்டின் புதிய வேகத்தையும் முன்னேற்றத்தையும் குறிக்கின்றன. அகல ரயில் பாதைகளில் ஆளில்லா ரயில்வே கிராசிங் என்பது கடந்த காலமாக மாறிவிட்டது. 1300க்கும் மேற்பட்ட ரயில் நிலையங்கள் ஒரே நேரத்தில் நவீனமயமாக்கப்பட்டு வருகின்றன. 100க்கும் மேற்பட்ட அமிர்த பாரத் நிலையங்கள் தயாராக உள்ளன.

ஏப்ரல் 22 அன்று, பஹல்காமில் பயங்கரவாதிகள் நமது சகோதரிகளின் நெற்றியில் இருந்து குங்குமத்தை அழித்தனர். பஹல்காமில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டின் வலியை 140 கோடி இந்தியர்களும் உணர்ந்தனர். பயங்கரவாதிகள் கற்பனை செய்ய முடியாத தண்டனையை வழங்குவதற்கான தீர்மானத்தை நாங்கள் நிறைவேற்றினோம்.

பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட இந்தியா ஒன்றுபட்டுள்ளது. பயங்கரவாதத்தின் மையத்தில் நாங்கள் தாக்குதல் நடத்தினோம். நமது அரசாங்கம் மூன்று படைகளுக்கும் சுதந்திரம் அளித்தது. மூன்று படைகளும் ஒரு சக்கரவியூகத்தை உருவாக்கியதால் பாகிஸ்தான் மண்டியிட்டது.

நமது சகோதரிகளின் குங்குமத்தை அழிக்க புறப்பட்டவர்கள், மண்ணில் புதையுண்டு அழிந்துபோனார்கள். இந்தியாவின் ரத்தம் சிந்தியவர்களின் கணக்குகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. இந்தியா மவுனமாக இருக்கும் என்று நினைத்தவர்கள் இன்று புதைந்து கிடக்கிறார்கள்.

ஏப்ரல் 22 ஆம் தேதி நடந்த தாக்குதலுக்கு பதிலளிக்கும் விதமாக, பயங்கரவாதிகளின் 9 பெரிய மறைவிடங்களை 22 நிமிடங்களில் அழித்தோம். இந்தியாவின் பதில் அதன் எதிரிகளுக்கு ஒரு வலுவான செய்தியை அனுப்பியது. குங்குமம் துப்பாக்கிப் பொடியாக மாறும்போது என்ன நடக்கும் என்பதை உலகமும், நாட்டின் எதிரிகளும் பார்த்துவிட்டார்கள்" என தெரிவித்தார்.

## 2026 தேர்தல் கூட்டணி குறித்து கடலூர் மாநாட்டில் அறிவிக்கப்படும்: பிரேமலதா



நாமக்கல்: மே.23-

கடலூர் மாவட்டத்தில் நடைபெறும் தேமுதிக மாநாட்டில் யாருடன் கூட்டணி என்பது குறித்து அறிவிக்கப்படும் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா கூறியுள்ளார்.

நாமக்கல்லில் தேமுதிக கொள்கை விளக்க பொதுக்கூட்டம் இன்று நடைபெற்றது. இதில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் பிரேமலதா கலந்து கொண்டார். இதைத் தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: 2026 சட்டப்பேரவை தேர்தலில் தேமுதிகவின் நிலைப்பாடு குறித்து ஏற்கனவே தெளிவுப்படுத்தி விட்டோம். கட்சியின் வளர்ச்சிக்கு மட்டுமே நாங்கள் முக்கியத்துவம் கொடுத்து செயல்பட்டு வருகிறோம்.

வரும் ஜனவரி மாதம் 9ம் தேதி கடலூர் மாவட்டத்தில் தேமுதிக மாநாடு நடத்தப்பட உள்ளது. அந்த மாநாட்டில் யாருடன் கூட்டணி ?, எத்தனை தொகுதி ?, கட்சியின் வேட்பாளர்கள் யார் ? என்பது குறித்து அறிவிக்க உள்ளோம். அதற்கு முன்பாக 234 தொகுதிகளிலும் தொகுதி பொறுப்பாளர்களை அறிவித்து, அதற்கான பணிகளை தொடங்க உள்ளோம். அதனைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் நான் மற்றும் விஜய பிரபாகர் ஆகியோர் சுற்றுப்பயணம் செய்து நேரடியாக தேமுதிக தொண்டர்களையும் மக்களையும் சந்திக்க உள்ளோம்.

அரக்கோணம் பகுதியில் கல்லூரி மாணவி ஒருவரை திமுக பிரமுகர் பாலியல் வன்கொடுமை செய்ததாக புகார் எழுந்துள்ளது. தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான இதுபோன்ற பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்துவிட்டன. அதனை திமுக அரசு தடுக்க தவறிவிட்டது. சமீபத்தில் பொள்ளாச்சி பாலியல் வழக்கின் மீதான தீர்ப்புக்கு நான் தலை வணங்குகிறேன். இன்றைய காலகட்டத்தில் பெண்களை தவறாக பயன்படுத்துகின்ற நிலை நிச்சயம் மாற வேண்டும். பெண்கள் மீதான குற்றச் சம்பவங்கள் அதிகரிக்க மது, கஞ்சா, வேலையின்மை போன்றவை காரணங்களாக உள்ளன.

இளைஞர்கள் தவறான பாதையில் செல்கின்றனர். அரக்கோணம் பாலியல் புகார் சம்பவத்தில் திமுக நிர்வாகியை அந்த கட்சி பதவியில் இருந்து நீக்கினால் மட்டும் போதாது, கடுமையான தண்டனை வழங்க வேண்டும். அப்போதுதான் இதுபோன்ற சம்பவங்களுக்கு நிரந்தரமான தீர்வு காண முடியும். எனவே ஒட்டுமொத்த பெண்களின் சார்பாக இதுபோன்ற செயல்களை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்.

இந்த சம்பவத்தில் ஆளுங்கட்சியின் ஆதரவோடு தவறு செய்தவர், இப்போது இல்லை என்றாலும், இன்னும் சில மாதங்களில் கட்டாயம் தண்டனை பெறுவார்.

ஏற்கனவே, மத்திய அரசு நடத்திய நிதி ஆயோக் கூட்டங்களில் திமுக அரசின் அமைச்சர்கள் கலந்து கொண்டார்கள். சில கூட்டத்தில் அனுமதி அவர்களுக்கு கிடைக்கவில்லை. ஆனால் இப்போது, மத்திய அரசின் ரூ.2,261 கோடி கல்வி உதவி தொகையை பெறுவதற்காக முதல்வர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதாக கூறுகிறார். மத்திய அரசிடம் இருந்து தமிழகத்திற்கு வர வேண்டிய நிதியை பெற்று வருகிறாரா?, இல்லை தன்னுடைய சுய லாபத்திற்காக, கட்சியின் லாபத்திற்காக செல்கிறாரா ? என்பதை நாம் பொறுத்திருந்து பார்ப்போம்.

அமலாக்கத் துறை, தமிழக டாஸ்மாக் ஊழல் குறித்து சோதனைகளை நடத்தி வருகின்ற நேரத்தில், அதில் சம்பந்தப்பட்டவர்கள் வெளியூர் சென்று விட்டதாக கூறுகின்றனர். ஆகாஷ் பாஸ்கர் என்பவருக்கு சம்மன் வழங்கப்பட்டுள்ளது. அவர் 4 திரைப்படங்களை எடுப்பதாக அட்வான்ஸ் கொடுத்தவர்களிடமும் விசாரணை நடைபெறும். மக்கள் பணத்தை ஊழல் செய்த யாரும் இனி தப்பி விட முடியாது. தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் தண்டனை பெறுவார்கள் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை" என்று அவர் கூறினார். இதனிடையே, செய்தியாளர்கள் சந்திப்பில், கட்சியின் நாமக்கல் மாவட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## கீழடி அறிக்கையை திருப்பியனுப்பிய மத்திய அரசு: சு.வெங்கடேசன் எம்.பி. கண்டனம்



சென்னை: மே.23-

கீழடி அறிக்கையில் திருத்தம் தேவை என ஒன்றிய தொல்லியல் துறை அமர்நாத் இராமகிருஷ்ணனின் அறிக்கையை திருப்பி அனுப்பியுள்ளது. தமிழ்நாட்டின் தொன்மைக்கும், கீழடியின் உண்மைக்கும் என்றென்றும் எதிரி பாஜக என மதுரை எம்.பி சு.வெங்கடேசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், 'கீழடி எனும் வரலாற்றுத் தொல் நகரம் கண்டறிய நடத்தப்பட்ட ஆய்வின் அறிக்கையை அமர்நாத் இராமகிருஷ்ணன் 2023 ஜனவரி மாதம் ஒன்றிய தொல்லியல் துறைக்கு சமர்பித்தார்.

ஆனால் ஒன்றிய தொல்லியல் துறை அந்த ஆய்வறிக்கையை வெளியிடவில்லை. இது குறித்து நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பபட்ட போது "விரைவில் வெளியிடப்படும்" என்று தொல்லியல் துறையால் உறுதிமொழி அளிக்கப்பட்டது. ஆனாலும் இப்பொழுது வரை அறிக்கை வெளியிடப்படவில்லை.

இந்நிலையில் வரும் 27 ஆம் தேதி நாடாளுமன்ற உறுதிமொழிக் குழு கூட்டம் நடைபெற உள்ள நிலையில், கீழடி அறிக்கையில் திருத்தம் தேவை என ஒன்றிய தொல்லியல் துறை அமர்நாத் இராமகிருஷ்ணனின் அறிக்கையை திருப்பி அனுப்பியுள்ளது.

கீழடியின் உண்மைகளை அதிகார பூர்வமாக அறிவிக்க ஒன்றிய தொல்லியல் துறை எளிதில் முன்வராது.

"தமிழ்நாட்டின் தொன்மைக்கும், கீழடியின் உண்மைக்கும்" என்றென்றும் எதிரிகள் யார் என்பதை ஒன்றிய தொல்லியல் துறையின் ஒவ்வொரு செயலும் நிரூபித்துக்கொண்டிருக்கிறது.

புராணங்களை வரலாறாக மாற்ற நாள்தோறும் பணியாற்றி வரும் பாஜக அரசு அதே வேகத்தோடு நமது வரலாற்றை மறைக்கவும் பணியாற்றி வருகிறது.

தமிழர்களின் வரலாற்றுத் தொன்மை என்பது பாஜக அரசின் அரசாணையோடு சம்பந்தபட்டதல்ல.. நிரூபிக்கப்பட்ட அறிவியலோடு சம்பந்தபட்டது!

அதனை மறைக்க அவர்களால் ஒரு போதும் முடியாது.

"கீழடி தமிழர்களின் தாய்மடி" என்ற உண்மையை உரக்கச்சொல்வோம்' எனத் தெரிவித்துள்ளார்

# கேரளாவில் 182 பேருக்கு கரோனா பாதிப்பு: சுகாதார அமைச்சர் எச்சரிக்கை



திருவனந்தபுரம், மே.23-

மே மாதத்தில் கேரளாவில் 182 பேருக்கு கரோனா பாதிப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதில் குறிப்பாக கோட்டயம், எர்ணாகுளம் மற்றும் திருவனந்தபுரம் போன்ற மாவட்டங்களில் உள்ள பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அம்மாநில சுகாதாரத்துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய கேரள சுகாதாரத் அமைச்சர் வீணா ஜார்ஜ், "தென்கிழக்கு ஆசிய நாடுகளில் கரோனா பாதிப்பு அதிக அளவில் பதிவாகி வருகின்றன. மேலும் கேரளாவிலும் கரோனா அதிகரிப்புக்கான வாய்ப்பு உள்ளது. தீவிரம் அதிகமாக இல்லாவிட்டாலும், தற்காப்பு முக்கியமானது. இந்த சூழ்நிலையை எதிர்கொண்டு நடவடிக்கை குறித்து திட்டமிட மாநில விரைவு பதிலளிப்பு குழுவின் (ஸிஸிஜி) உயர்மட்டக் கூட்டம் கூட்டப்பட்டது. அறிகுறி உள்ள நபர்களுக்கு கோவிட்19 பரிசோதனை அதிகரிக்கப்படும் என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. மருத்துவமனைகளில் ஆர்டிபிசிஆர் கருவிகள், பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் முகக்கவசங்கள் கிடைப்பதை உறுதி செய்ய மருத்துவமனைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சுகாதார ஊழியர்கள் எல்லா நேரங்களிலும் முகக்கவசம் அணிய வேண்டும்.

சளி, தொண்டை வலி, இருமல், மூச்சுத் திணறல் போன்ற அறிகுறிகள் உள்ளவர்கள் முகக்கவசம் அணிய வேண்டும். முதியவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் கடுமையான நோய்கள் உள்ளவர்கள் பொது இடங்களிலும், பயணத்தின் போதும் முகக்கவசம் அணிவது நல்லது. மக்கள் தேவையற்ற மருத்துவமனை வருகைகளைத் தவிர்க்க வேண்டும். அவ்வப்போது சோப்பு போட்டு கைகளைக் கழுவுவது நல்லது. எங்கு சிகிச்சை பெற்றாலும், அந்த மருத்துவமனையில் சிகிச்சையை உறுதி செய்ய வேண்டும்.

தற்போதைய கோவிட் வகைகள் அதிக அளவில் பரவும் தன்மையை உடையவை என்றாலும், அதன் தீவிரம் அதிகமாக இல்லை. இருப்பினும், இந்த தொற்றுநோயைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அவசியமாகும்" என்று அமைச்சர் தெளிவுப் படுத்தினார். கேரளாவில் மே மாதத்தில் கரோனா பாதிப்புக்குள்ளான 182 பேரில், கோட்டயத்தில் அதிகபட்சமாக 57 பேரும், அதைத் தொடர்ந்து எர்ணாகுளத்தில் 34 பேரும், திருவனந்தபுரத்தில் 30 பேரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.





# மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு ஜூன் 12ல் தண்ணீர் திறப்பு: மாவட்ட ஆட்சியர் ஆய்வு

மேட்டூர், மே.23-

மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்துக்கு ஜூன் 12ம் தேதி முதல்வர் தண்ணீர் திறந்து வைக்கிறார். இதனையொட்டி, மேட்டூர் அணையில் சேலம் மாவட்ட ஆட்சியர் பிருந்தா தேவி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

காவிரி டெல்டா பாசனத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12ம் தேதி தண்ணீர் திறக்கப்படும். நடப்பாண்டில் அணையில் நீர் இருப்பு திருப்திகரமாக இருப்பதால் குறித்த நாளான ஜூன் 12ம் தேதி மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. அதன்படி, ஜூன் 12ம் தேதி மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்க தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை தர உள்ளார். இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் உள்ளிட்டவை குறித்து சேலம் மாவட்ட ஆட்சியர் பிருந்தா தேவி இன்று (மே 22) ஆய்வு செய்தார்.

அப்போது, மேட்டூர் அணையின் வலது கரையில் மேடை அமைக்கப்பட உள்ள இடம், மேல்மட்ட மதகில் மின் விசையை இயக்கும் இடம் உள்ளிட்ட இடங்களில் ஆய்வு செய்தார். தொடர்ந்து, நீர்வளத்துறை அதிகாரிகளிடம் நீர்வரத்து, நீர் வெளியேற்றம், பாசனத்துக்கு நீர் திறப்பு உள்ளிடவைகளை கேட்டறிந்தார். இந்த ஆய்வின் போது, நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் செல்வராஜ், கோட்டாட்சியர் சுகுமார், வட்டாட்சியர் ரமேஷ், டிஎஸ்பி ஆரோக்கியராஜ், உதவி பொறியாளர் சதிஷ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

நீர்வரத்து அதிகரிப்பு: காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் கடந்த சில தினங்களாக மழை பெய்து வருவதால், மேட்டூர் அணைக்கான நீர்வரத்து அதிகரித்துள்ளது. மேட்டூர் அணைக்கு நீர்வரத்து கடந்த 7 நாட்களாக அதிகரித்து வருகிறது. அதன்படி, அணைக்கு நேற்று (மே 21) விநாடிக்கு 12,819 கன அடியாக இருந்த நிலையில் இன்று (மே 22) விநாடிக்கு 13,606 கன அடியாக அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, மேட்டூர் அணையின் நீர்மட்டம் 110.03 அடியில் இருந்து, இன்று 110.77 அடியாக உயர்ந்துள்ளது.

அணையின் நீர் இருப்பு 78.45 டிஎம்சியிலிருந்து, இன்று 79.60 டிஎம்சியாக உயர்ந்துள்ளது. மேட்டூர் அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 1,000 கன அடி நீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவை விட, நீர்வரத்து அதிகரித்து இருப்பதால் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. அணையின் முழு கொள்ளளாவான 120 அடியை எட்ட இன்னும் 9 அடி தான் உள்ளது.



# அக்னி நட்சத்திர விழா நிறைவு: பழநி மலையைச் சுற்றி வந்து வழிபட்ட பக்தர்கள்

பழநி, மே.23-


அக்னி நட்சத்திர விழா நிறைவடைவதையொட்டி அதிகாலை முதலே திரளான பக்தர்கள் பழநி மலையைச் சுற்றி கிரிவலம் வந்து வழிபட்டனர்.

திண்டுக்கல் மாவட்டம் பழநியில் ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் கடைசி 7 நாட்களும், வைகாசி மாதத்தின் முதல் 7 நாட்களும் அக்னி நட்சத்திர விழா நடைபெறும். இந்த ஆண்டு அக்னி நட்சத்திர விழா மே 8ம் தேதி தொடங்கியது. 'சித்திரை கழுவு' என்று அழைக்கப்படும் இந்த விழாவில் உள்ளூர் மற்றும் வெளியூர் பக்தர்கள் 14 நாட்களுக்கு பழநி மலையைச் சுற்றி கிரிவலம் வந்து வழிபடுவது வழக்கம்.

இந்த நாட்களில் காலை மற்றும் மாலையில் பழநி மலையைச் சுற்றி கிரிவலம் வரும் போது, அங்கு வீசும் மூலிகை காற்றால் நோய்கள் குணமாகும் என்ற நம்பிக்கை மக்களிடையே உள்ளது. இந்நிலையில், அக்னி நட்சத்திர விழா இன்றுடன் (மே 21) நிறைவடைகிறது.

எனவே, அதிகாலை முதல் உள்ளூர் மட்டுமின்றி வெளி மாவட்டங்களை சேர்ந்த பக்தர்களும் கால்களில் காலணி அணியாமல், பெண்கள் முருகனுக்கு உகந்த கடம்ப மலர்களைத் தலையில் சூடியும், ஆண்கள் கைகளில் ஏந்தியபடி கிரிவலம் வந்து வழிபட்டனர். சில பக்தர்கள் தீர்த்த காவடி, பால் காவடி, பன்னீர் காவடியுடன் கிரிவலம் வந்து தங்கள் நேர்த்திக் கடனை செலுத்தினர்.

மலைக்கோயிலில் அதிகாலை 4 மணிக்கு நடை திறக்கப்பட்டு விஸ்வரூப தரிசனம், காலை 4.30 மணிக்கு விளா பூஜை நடைபெற்றது. முன்னதாக, சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் ஆராதனை கள் நடந்தன. தரிசனத்துக்காக அதிகாலை முதலே பக்தர்கள் மலைக்கோயிலில் குவியத் தொடங்கினர். கூட்டம் அதிகளவில் இருந்ததால் பக்தர்கள் 2 மணி நேரம் வரிசையில் காத்திருந்து தரிசனம் செய்தனர்.



# கோடை விடுமுறையை ஒட்டி ஐதராபாத் - கொல்லம் இடையே சிறப்பு ரயில் இயக்கம்

சென்னை, மே.23-

கோடை விடுமுறையை ஒட்டி ஐதராபாத் -கொல்லம் இடையே சிறப்பு ரயில் இயக்கப்படுவதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது. மே 24, 31, ஜூன் 7, 14, 21, 28 ஆகிய தேதிகளில் ஐதாராபாதிலிருந்து கொல்லதுக்கும், மே 27, ஜூன் 2, 9, 16, 23, 30, ஆகிய தேதிகளில் கொல்லத்தில் இருந்து ஐதராபாத்துக்கும் சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகிறது. இந்த ரயில் காட்பாடி, ஜோலார்பேட்டை, சேலம், ஈரோடு, திருப்பூர் உள்ளிட்ட ரயில் நிலையங்களில் நின்று செல்லும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



■ தமிழ்நாடு முதலமைச்சரால் மண்டல பொருளாளராக நியமிக்கப்பட்டு சிவகங்கை மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்திற்கு வருகை தந்த நிதி மற்றும் சுற்றுச்சூழல் பருவநிலை மாற்ற அமைச்சர் தங்கம் தென்னரசுவை மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் புத்தாடை கொடுத்து நேற்று (மே.22) உற்சாகமாக வரவேற்பு அளித்தார்.

# ராமநாதபுரத்தில் 38,756 மீனவ குடும்பங்களுக்கு தடைக்கால நிவாரண நிதி வழங்கல்



ராமேசுவரம், மே.23-

ராமநாதபுரம் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 38,756 மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடி தடைக்கால வழங்கப்படுகிறது.

தமிழக கடற்பகுதியில் மீன் இனப் பெருக்க காலத்தை கருத்திற்கொண்டும், மீன்வளத்தைப் பாதுகாத்திடும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் தமிழகத்தில் ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரை இரண்டு மாதங்களுக்கு விசைப்படகுகள் கடலில் மீன்பிடிக்க தடை விதிக்கப்படுகிறது.

அதன்படி கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டிணம், மயிலாடுதுறை, திருவாரூர், கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், சென்னை ஆகிய தமிழகத்தின் 14 கடற்கரை மாவட்டங்களைச் சேர்ந்த விசைப்படகுகள் மற்றும் இழுவலைப் படகுளை பயன்படுத்தி கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்லக் கூடாது என தடை விதிக்கப் பட்டுள்ளது.

மீன்பிடி தடைக்காலத்தின் போது மீன்பிடி விசைப்படகுகள், இழுவலைப் படகுகளில் மீன்பிடிப்பு செய்யும் பணியாளர்கள் மற்றும் முழுநேர மீன்பிடிப்பினை சார்ந்த மீனவ குடும்பங்கள் முற்றிலுமாக தொழிலின்றி வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதால் மீனவர்கள் தங்களது குடும்பத்தினை சிரமமின்றி நடத்திச் செல்ல 2008ம் ஆண்டு முதல் மீன்பிடி தடைக்கால நிவாரணம் வழங்கப்படுகிறது. இந்த நிவாரணத் தொகையை தமிழக அரசு தடைக்காலம் முடிந்ததும் தான் வழங்கி வந்தது.

இந்நிலையில், செவ்வாய்கிழமை சென்னையில் மீன்வளம், மீனவர் நலத் துறை மற்றும் கால்நடைகள் பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா இந்த ஆண்டுக்கான மீன்பிடித் தடைக்காலத்தில், தமிழகத்தில் உள்ள 14 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 1.90 லட்சம் கடல் மீனவக் குடும்பங்களுக்கு மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகை ரூ.8 ஆயிரம் வீதம் வழங்குவதற்கான ஆணைகளை வழங்கி துவங்கி வைத்தார்.

இதனடிப்படையில் ராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்தம் 38 ஆயிரத்து 756 மீனவ குடும்பங்களுக்கு நடப்பு ஆண்டில் மீன்பிடி தடைக்கால நிவாரண நிதி வழங்கப்படுகிறது. இது மீனவர்கள் வங்கி கணக்கில் ரூ.5 ஆயிரம், ரூ.1,500, ரூ.1,500 என மூன்று தவணைகளில் வரவு வைக்கப்படும், என மீன் வளத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# சிங்கம்புணரி குவாரி விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 6 ஆக அதிகரிப்பு

சிவகங்கை, மே.23-

சிங்கம்புணரி அருகே குவாரி விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 6 ஆக உயர்ந்தது.

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி அருகே மல்லாக்கோட்டையில் தனியார் கல் குவாரியில் நேற்று காலை 400 அடி ஆழ பள்ளத்தில் தொழிலாளர்கள் பணிபுரிந்து கொண்டிருந்தனர். அப்போது பாறைகள் சரிந்து விழுந்ததில் பொக்லைன் ஓட்டுநர் ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த ஹர்ஜித் (28), மற்றும் முருகானந்தம் (49), ஆண்டிச்சாமி (50), ஆறுமுகம் (50), கணேசன் (43) ஆகிய 5 பேர் உயிரிழந்தனர். மைக்கேல் (43) மதுரை தனியார் மருத்துனையில் அனுமதிக்கப்பட்டார்.

மற்றவர்கள் உடலை மீட்ட நிலையில், பொக்லைன் இயந்திரத்துடன் ஹர்ஜித் உடல் பெரிய பாறைக்குள் சிக்கி கொண்டதால், மீட்பதில் சிக்கல் ஏற்பட்டது. இதையடுத்து நெல்லை மாவட்டம் ராதாபுரத்தில் இருந்து தேசிய மீட்பு படையினர் 30 பேர் வரவழைக்கப்பட்டனர். பின்னர் இரவு நேரமானதால் மீட்புப் பணி கைவிடப்பட்டது.

இந்நிலையில் காலை 6. 30 மணிக்கு ஆய்வாளர் கலையரசன் தலைமையிலான தேசிய மீட்பு படையினர், உதவி மாவட்ட அலுவலர் ஜெயராணி, நிலைய அலுவலர் பிரகாஷ் தலைமையிலான சிங்கம்புணரி, திருப்பத்தூர் தீயணைப்புத் துறையினருடன் இணைந்து 3 மணி நேரம் போராடி 9.30 மணிக்கு ஹரிஜித் உடலை மீட்டனர். பின்னர் உடல் பிரேத பரிசோதனைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மீட்பு பணியை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் பார்வையிட்டார்.

மேலும், கல் குவாரி உரிமையாளர் மேகவர்மன் மீது டிஎஸ்பி செல்வகுமார் தலைமையிலான எஸ்.எஸ்.கோட்டை போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர். இதனிடையே சென்னையில் இருந்து வந்த மகேஷ்சட்லா தலைமையிலான சுரங்கத்துறை அதிகாரிகள் கல்குவாரியில் விதிமீறல் இருக்கிறதா என்பது குறித்து ஆய்வு செய்தனர். மேலும் அவர்கள் அனுமதி வாங்கிய சர்வே எண்ணில் தான் குவாரி நடக்கிறதா என்பது குறித்தும் வருவாய்த்துறை அதிகாரிகளுடன் இணைந்து ஆய்வு செய்து வருகின்றனர். இதனிடையே விபத்துக்கு காரணமான கல் குவாரி உரிமத்தை தற்காலிகமாக ரத்து செய்து மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் உத்தரவிட்டார்.

இந்நிலையில் நேற்று இரவு மதுரை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்த மைக்கேல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதனால் இந்த விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 6 ஆக உயர்ந்தது.

# தமிழகத்தின் குட்டி ஜப்பான் சிவகாசியில் பள்ளி, கல்லூரி நோட்டுகள் தயாரிப்பு படு ஸ்பீடு: 10 சதவீதம் விலை குறைய வாய்ப்பு



சிவகாசி, மே.23-

தமிழகத்தின் குட்டி ஜப்பான் என அழைக்கப்படும் சிவகாசியில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு தேவையான நோட்டுகள் தயாரிக்கும் பணியில் இரவு, பகலாக தொழிலாளர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். மூலப்பபொருள் விலை குறைவால், இந்தாண்டு 10 சதவீதம் வரை விலை குறைய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கின்றனர். விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சிவகாசி தமிழகத்தின் குட்டி ஜப்பான் என அழைக்கப்படுகிறது. இங்கு பட்டாசு தொழிலுக்கு அடுத்தபடியாக அச்சுத் தொழில் பிரதானமாக உள்ளது. ஆண்டுதோறும் பள்ளி, கல்லூரிகளுக்கு தேவையான நோட்டு, புத்தகங்கள், டைரிகள் உள்ளிட்டவை தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. இந்நிலையில், வரும் கல்வியாண்டிற்குத் தேவையான நோட்புக்குகள் தயாரிக்கும் பணி 30க்கும் மேற்பட்ட கம்பெனிகளில் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

தொழிலாளர்கள் இரவு, பகல் பாராமல் தயாரிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். லாங்சைஸ், பிராடிக்கல், கணக்கு, இரண்டு கோடு, நான்கு கோடு, கிராப் நோட்டுகள் என பல வகைகளில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. பலவித வண்ணங்களாலான பல்வேறு டிசைன்களில் அனைவரையும் கவர்ந்திழுக்கும் வகையில் தயார் செய்யப்பட்டு வருகிறது. இங்கு தயாரிக்கப்படும் நோட்டுகள் தமிழகம் மட்டுமல்லாமல் கேரளா, புதுச்சேரி, கர்நாடகா ஆகிய மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன. கோடை விடுமுறை முடிந்து ஜூன் மாதம் பள்ளி, கல்லூரிகள் திறக்கப்பட உள்ளன. இன்னும் ஒரு சில நாட்களில் தமிழகம் முழுவதும் பாட நோட்டுகளின் விற்பனை சூடுபிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

10% விலை குறையும்

நோட்புக் தயாரிக்க ஒயிட் பேப்பர், பைண்டிங் அட்டை, பசை உள்ளிட்ட மூலப்பொருட்கள் தேவை. இவைகளின் விலையேற்றத்தால் கடந்த காலங்களில் நோட்டு புத்தகங்களின் விலை ஏறிச் சென்ற நிலையில், கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் மூலப் பொருளான பேப்பர் விலை குறைந்துள்ளதால் நோட்டுபுக் விலையும் குறைந்துள்ளது. கடந்த ஆண்டு 15 சதவிகிதம் விலை குறைந்தது. இந்த ஆண்டு கடந்த ஆண்டை விட 10 சதவிகிதம் விலை குறைந்துள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து நோட்புக் தயாரிப்பாளர்கள் கூறும்போது, 'பட்டாசு தொழிலுக்கு அடுத்தபடியாக சிவகாசியில் அச்சுத் தொழில் உள்ளது. இங்கு தயாரிக்கப்படும் பள்ளி நோட்டுகள் தரமாக இருப்பதால் தனிமவுசு உண்டு. நோட்டுகள் தயாரிக்க தேவையான காகிதம், அட்டை விலை கடந்த ஆண்டை விட குறைவாக கிடைத்தது., இதனால் கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் 10 சதவிகிதம் நோட்புத்தகம் விலையை குறைத்துள்ளோம்' என்றனர்.


# ருத்ரபிரயாக் கார்த்திக் சுவாமி கோயிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை 3 மடங்கு அதிகரிப்பு

ருத்ரபிரயாக், மே.23-

உத்தராகண்ட் மாநிலத்தில் உள்ள ருத்ரபிரயாக் கார்த்திக் சுவாமி கோயிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை கடந்த மூன்று ஆண்டுகளில் 3 மடங்கு அதிகரித்துள்ளது என்று அம்மாநில அரசின் சுற்றுலா துறை கூடுதல் செயலாளர் ரவி சங்கர் தெரிவித்துள்ளார்.

தேவ பூமியாக உத்தராகண்ட் மாநிலம் போற்றப்படுகிறது. பஞ்ச பிரயாகையில் (நந்தப் பிரயாகை, தேவப் பிரயாகை, ருத்ர பிரயாகை, கர்ணப் பிரயாகை, விஷ்ணுப் பிரயாகை) ஒன்றான ருத்ரப் பிரயாகையில் அலக்நந்தா நதியும் மந்தாகினி நதியும் சங்கமமாகின்றன. ருத்ரப் பிரயாகையில் கடல் மட்டத்தில் இருந்து 3,050 மீட்டர் உயரத்தில் கார்த்திக் சுவாமி கோயில் அமைந்துள்ளது. சிலிர்க்க வைக்கும் சீதோஷ்ண நிலை, கரடு முரடான பாதை, வழி நெடுகிலும் மரங்கள், கொஞ்சம் அசந்தாலும் வழுக்கி விடும் பாறைகள் என்ற நிலையைக் கடந்து முருகப் பெருமானை தரிசிக்க வேண்டும்.

உலகம் முழுவதும் உள்ள முருக பக்தர்களுக்கு, இக்கோயில் பற்றி தெரிய வேண்டும் என்பதற்காக உத்தராகண்ட் மாநில அரசு பெருமுயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதன்படி, ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தில் முருகப் பெருமானுக்கு



108 வலம்புரி சங்கு அபிஷேகத்துக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, பல மாநிலங்களில் இருந்து பக்தர்கள் வந்து முருகப் பெருமானை தரிசித்துச் செல்கின்றனர். இந்த ஆண்டும் ருத்ரபிரயாக் கார்த்திக் சுவாமி கோயிலில், முருகப் பெருமானுக்கு 108 வலம்புரி சங்கு அபிஷேகம் நடைபெற்றது. இதில் பல ஆதின குருநாதர்கள், உத்தராகண்ட் மாநில அரசின் சுற்றுலாத் துறை கூடுதல் செயலாளர் ரவிசங்கர், பத்ம டிரம்ஸ் சிவமணி, மாண்டலின் ராஜேஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் உத்தராகண்ட் அரசின் சுற்றுலா துறையின் கூடுதல் செயலாளர் ரவி சங்கர் பேசும்போது, "கடந்த 3 வருடங்களாக இக்கோயிலில் இருந்து புனித வஸ்திரங்களை கொண்டு சென்று தமிழ்நாட்டில் உள்ள முருகர் கோயிலில் சாற்றப்பட்டு வருவது சிறப்பு. இலங்கையில் 3 கோயில்களின் வஸ்திரங்கள், ஒரு கோயிலில் இருந்து வேலும் எடுத்து வந்து, ருத்ரபிரயாகை கார்த்திக் சுவாமி கோயிலில் பூஜை செய்யப்படுகிறது. இந்த கோயிலுக்கு தமிழகம் உட்பட பல மாநிலங்களில் இருந்து வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை கடந்த மூன்று ஆண்டுகளில் 3 மடங்காக அதிகரித்திருக்கிறது. பக்தர்களுக்கான அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளும் சிறப்பாக செய்யப்பட்டுள்ளது. தற்போது அனைத்து வசதிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன" என்றார். இந்நிகழ்ச்சியில் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.

டேராடூன் விமான நிலையத்தில் இருந்து 150 கிமீ மலைப் பாதையைக் கடந்து சென்றால் ருத்ரபிரயாக் நகரத்தை அடையலாம். அங்கிருந்து 40 கிமீ மலை மார்க்கமாக பயணித்து கனக்சவுரி கிராமத்தை அடைந்து அங்கிருந்து 3.5 கிமீ மலையேறிச் செல்ல வேண்டும். பின்னர் அரை கிமீ தூரத்துக்கு 400 செங்குத்தான படிக்கட்டுகளில் ஏறி மலை உச்சியை அடைந்தால், கார்த்திக் சுவாமியை தரிசித்து அருள்பெறலாம்.

# தமிழகத்தில் 5.52 லட்சம் நீர் வாழ் பறவைகள்; 2.32 லட்சம் நிலத்தில் வாழும் பறவைகள்: கணக்கெடுப்பில் சுவாரஸ்ய தகவல்

சென்னை, மே.23-

தமிழகத்தில் பல வகையான பறவைகள் உள்ளது என்பது கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது. பறவைகள், சுற்றுச்சூழலின் ஆரோக்கியத்தைப் பேணுவதில் முக்கிய பங்கு வகிக்கும் உயிரினம் ஆகும். எனவே, பறவை இனப்பன்மையை பாதுகாக்கவும், அவற்றின் வாழ்விடங்களைப் பேணவும், தமிழ்நாடு அரசு மாநிலம் முழுவதும் 2000க்கும் மேற்பட்ட இடங்களில் (ஈர நிலங்கள் மற்றும் நிலப்பகுதிகள்) மிகப்பெரிய அளவில் ஒருங்கிணைந்த பறவைகள் கணக்கெடுப்பு 2023 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நடத்தி வருகிறது.

தமிழ்நாட்டின் பறவைகளை கண்காணிப்பதன் நோக்கம் பறவைகளின் இருப்பை பதிவு செய்வதோடு மட்டுமல்லாமல், அவற்றின் வாழ்விடங்கள் தொடர்பான அச்சுறுத்தல் காரணிகள் உள்ளிட்ட பிற முக்கிய சூழல் அம்சங்களையும் பதிவு செய்து, பறவைகளின் வாழ்விடப் பாதுகாப்புக்கான சிறந்த நீண்டகாலத் திட்டங்கள் வடிவமைக்க உதவுகிறது. இவை பறவை இனங்களின் செயல்பாடுகள், பரவல் மற்றும் செறிவு பற்றிய உள்நோக்கை வழங்கி பறவைகள் பாதுகாப்பு முயற்சிகளுக்கு



உதவுகிறது.

தமிழ்நாட்டில் இடம்பெயரும் பறவைகள் பருவம், வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் வடகிழக்கு பருவமழை காலமான அக்டோபரில் தொடங்கி ஏப்ரல் மாதம் வரை தொடர்கிறது. பறவைகள் சரணாலயம் மற்றும் பாதுகாப்பு சரணாலயங்களில் உள்ள பறவைகளை கண்காணிப்பது ஒரு தொடர்ச்சியான பயிற்சியாக இருந்தாலும், பறவைகளின் பல்வேறு வாழ்விடங்களில் மாநில அளவிலான கண்காணிப்பு பயிற்சியும் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு வனத்துறையால் நடத்தப்படுகிறது. 2025 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த பறவைகள் கணக்கெடுப்பு இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்டுள்ளது.

கட்டம் 1: ஈர நிலப் பறவைகள் (உள்நாட்டு மற்றும் கடலோர ஈர நிலங்கள்) 8 மற்றும் 9 மார்ச் 2025.

கட்டம் 2: நிலப்பகுதி பறவைகள் (பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு உள்ளேயும் வெளியேயும்) 15 மற்றும் 16 மார்ச் 2025. இந்த ஆண்டு பறவைகள் கணக்கெடுப்பு, அழிந்து வரும் பறவைகள் மற்றும் இரவு நேர பறவைகளை ஆவணப்படுத்துவதற்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்தது. இந்த கணக்கெடுப்பில், தமிழ்நாட்டில் அழிந்து வரும் 37 பறவை இனங்களில், 26 இனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் 17 இரவு நேரப் பறவை இனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

934 இடங்களில் ஈர நிலப் பறவைகள் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, 397 பறவை இனங்களைச் சேர்ந்த 5,52,349 பறவைகள் கணக்கிடப்பட்டுள்ளன. இவற்றில், 1,13,606 பறவைகள் இடம்பெயரும் பறவைகள் மற்றும் 49% பறவைகள் கடலோர மாவட்டங் களைச் சேர்ந்தவை. சின்னக்கொக்கு/ கள்ளவாயன் (Little egret), சிறிய நீர்க்காகம் (Little cormorant), நத்தைகுத்தி நாரை (Asian open bill), கருந்தலை அரிவாள்மூக்கன் (Black headed Ibis), அன்றில் (Glossy Ibis) மற்றும் குளக்கொக்கு (Indian pond Heron) ஆகியவை வசிக்கும் பறவைகளில் மிகவும் பொதுவான பறவைகளாக காணப்பட்டன. சாம்பல்நிற வாத்து (Greylag Goose), பெரும் பூநாரை (Greater Flamingo), பெரியகோட்டான் (Eurasian Curlew), கோணமூக்கு உள்ளான் (Pied Avocet), சிறிய கொண்டை ஆலா (Lesser Crested Tern) மற்றும் கரண்டிவாயன் (Eurasian Spoon bill) ஆகியவை புலம்பெயர்ந்த பறவைகளில் மிகவும் பொதுவான பறவைகளாக காணப்பட்டன.

1093 இடங்களில் நிலப்பரப்பு பறவைகள் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, 401 பறவை இனங்களைச் சேர்ந்த 232519 பறவைகள் கணக்கிடப்பட்டுள்ளன. இதில், 113606 பறவைகள் புலம்பெயர்ந்த பறவைகளாக இருந்தன. வீட்டுக்காக்கை (House crow), நாகணவாய் (Common Myna), பச்சைக்கிளி (Rose Ringed Parakeet), சின்னான் (அ) செம்புழை கொண்டலாத்தி (Rose Vented Bulbul), தவிட்டு குருவி / பூனியல் குருவி (Yellow-billed Babbler), பனை உழவாரன் (Asian Palm Swift), கறுங்கரிச்சான் (Black Drango), சின்னக்கொக்கு/ கள்ளவாயன் (Little Egret), இந்திய மயில் (Indian Pea fowl), புள்ளிப்புறா (Spotted Dove) ஆகியவை மிகவும் பொதுவான பறவைகளாக காணப்பட்டன. இந்த ஆண்டு கணக்கெடுப்பு மார்ச் மாதத்தில்,

இடம்பெயரும் பருவத்தின் முடிவில், பருவத்தின் வெவ்வேறு மாதங்களில், பறவைகளின் எண்ணிக்கையைப் பரப்பும் நோக்கத்துடன் நடத்தப்பட்டுள்ளது. இதனால் பல்வேறு மாதங்களில் பறவைகளைப் பார்ப்பதற்கான ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில், மிகவும் நல்ல மதிப்பீடு செய்யப்படுகிறது. தமிழ்நாடு வனத்துறை, தன்னார்வலர்களை இந்த பயிற்சியில் பங்கேற்க அனுமதிக்கிறது. இருப்பினும் தரவுகளைத் தொகுத்து பகுப்பாய்வு செய்வது நிபுணர்களின் குழுவால் மட்டுமே செய்யப்படுகிறது. வரவிருக்கும் மாதங்களில், தமிழ்நாடு முழுவதும் உள்ள இடஞ்சார்ந்த தற்காலிக மாறுபாடுகள் குறித்த ஆழமான நுண்ணறிவு பெற ஏராள மான தரவுகள் மேலும் பகுப்பாய்வு செய்யப்படும்.



# விளம்பர பலகைகளுக்கு ஆன்லைனில் அனுமதி

புழல், மே.23-

விளம்பர பலகைகள் அமைப்பதற்கு சென்னை மாநகராட்சியில் ஆன்லைனில் அனுமதி வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியில் விளம்பர பலகைகள் நிறுவுவதற்கு மாநகராட்சியின் சார்பில் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு ஒப்புதல் வழங்குவதில் தேவையான ஆவணங்களை நேரடியாக அலுவலகம் வந்து சமர்ப்பிக்கும் முறை நடைமுறையில் இருந்தது. இந்த முறையை மாற்றி வெளிப்படைத்தன்மையாகவும், திறனோடும், எளிதாகவும் அனுமதி வழங்குவதற்கு ஏதுவாக நிகழ்நிலையில் (ஆன்லைன் சிஸ்டம்) அனுமதி வழங்கும் நடவடிக்கை நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்கள் தங்களுடைய விண்ணப்பங்களை உரிய ஆவணங்களோடு சென்னை மாநகராட்சியின் இணையதளமான www.chennaicorporation.gov.in எனும் பக்கத்தில் பதிவேற்றம் செய்து விண்ணப்பத்தின் நிலையை அறிந்து கொள்ளலாம். இந்த முறையில் எளிமையாகவும், காலதாமதமின்றியும் ஒப்புதல் வழங்குவதற்கும், அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள விளம்பர பலகைகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.



■ இந்திய அணுசக்தி கழகத்தின் முன்னாள் தலைவர் ஸ்ரீனிவாசன் உடல் 30 குண்டுகள் முழங்க அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது. அணு விஞ்ஞானி ஸ்ரீனிவாசன் வயது மூப்பு காரணமாக காலமானார்.

# தூத்துக்குடி - கொழும்பு இடையே தினசரி சரக்கு தோணி போக்குவரத்து: ஒன்றிய கப்பல் போக்குவரத்து இயக்குநரகம் அனுமதி

**தூத்துக்குடி, மே.23–**

தூத்துக்குடியில் இருந்து இலங்கை, மாலத்தீவு, லட்சத்தீவு ஆகிய இடங்களுக்கு வழக்கமாக காய்கறிகள், கட்டுமான பொருட்கள், கற்கள், ஜல்லிக்கற்கள், தென்னை மரங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் தோணி மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. பொதுவாக சரக்கு தோணி போக்குவரத்து என்பது கடல் சீதோஷ்ண நிலையை கருத்தில் கொண்டு இயக்கப்பட்டு வருகிறது. மே மாதம் 1ம் தேதி முதல் ஆகஸ்ட் மாதம் 30ம் தேதி வரை கடலில் கடினமான காலநிலை காணப்படுவதால் தோணிகள் இயக்கப்படுவது இல்லை. செப்டம்பர் மாதம் 1ம் தேதி முதல் ஏப்ரல் 30ம் தேதி வரை சுமூகமான காலநிலை நிலவுவதால் தோணி போக்குவரத்து நடைபெறும்.

இந்நிலையில் தூத்துக்குடி தோணி உரிமையாளர் சங்கத்தினர் கப்பல் போக்குவரத்து துறை இயக்குநரிடம் கோரிக்கை மனு அளித்துள்ளனர். அதில், 'தோணிகளில் தற்போது அதிநவீன பாதுகாப்பு சாதனங்கள், தகவல் தொடர்பு சாதனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதே போன்று காலநிலையால் எந்தவித அசம்பாவித சம்பவங்களும் கடந்த சில ஆண்டுகளாக நடைபெறவில்லை. எனவே தூத்துக்குடி - கொழும்பு, தூத்துக்குடி - மாலத்தீவு இடையே ஆண்டு முழுவதும் தினசரி தோணி போக்குவரத்திற்கு அனுமதி அளிக்க வேண்டும்' என்று கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனை பரிசீலித்த ஒன்றிய கப்பல் போக்குவரத்து இயக்குநரகம் உரிய நிபந்தனைகளுடன் அனைத்து பருவ காலங்களிலும் தோணி போக்குவரத்துக்கு அனுமதி அளித்துள்ளது. அதன்படி தூத்துக்குடி கொழும்பு இடையேயான தோணி போக்குவரத்து ஆண்டு முழுவதும் அனைத்து பருவகாலங்களிலும் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. இதேபோல் தூத்துக்குடி ஸ்ரீ மாலத்தீவு இடையே தோணி போக்குவரத்து ஏப்ரல் 30ம் தேதியுடன் நிறுத்தப்பட்டு வந்தது. இதனை மே மாதம் 15ம் தேதி வரை இயக்க அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. இதனால் தோணி தொழில் புத்துயிர் பெறும் என்று நூற்றுக்கணக்கான தோணி தொழிலாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# உள்ளாட்சி இடைத்தேர்தல் நடத்த இடைக்காலத் தடை: ஐகோர்ட் கிளை உத்தரவு

**மதுரை, மே.23–**

உள்ளாட்சிகளில் காலியாக உள்ள இடங்களுக்கு இடைத் தேர்தல் நடத்த ஐகோர்ட் கிளை இடைக்கால தடை விதித்துள்ளது. நெல்லையைச் சேர்ந்தவர் சண்முகநாதன். இவர், ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனு: கடந்த 2021ம் ஆண்டு 9 மாவட்டங்களில் மட்டும் உள்ளாட்சி தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தல் 2011ம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையிலேயே வார்டு நிர்ணயம் மற்றும் ஒதுக்கீடு முடிவு செய்யப்பட்டது. கடந்தாண்டுகளில் மக்கள் தொகை பெருமளவில் மாற்றமடைந்துள்ளது. இதுகுறித்து சென்னை ஐகோர்ட்டில் தொடர்ந்த வழக்கில், வார்டு மறுவரையறை மற்றும் ஒதுக்கீடு (ரிசர்வேஷன்) தொடர்பாக முடிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படும் என அரசு தரப்பில் உறுதியளிக்கப்பட்டது. தற்போது உள்ளாட்சி தேர்தலுக்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

இதில் வாக்காளர் பட்டியலில், பாதி வாக்காளர்களின் புகைப்படம் இல்லாமல் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. எனவே



தமிழகத்தில் காலியாக உள்ள உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுக்கான வாக்காளர் பட்டியலை வெளியிடுவதற்கு முன்பாக வாக்காளர் பட்டியலில் உள்ள அனைத்து வாக்காளர்களின் புகைப்படங்கள் இடம் பெற்று இருப்பதை உறுதிப்படுத்துவதோடு, வார்டு (ரிசர்வேஷன்) ஒதுக்கீட்டையும் முடிவு செய்ய வேண்டும். இதன் பின்னர் 9 மாவட்டங்களுக்கான உள்ளாட்சி காலியிடத்திற்கான தேர்தலை நடத்த வேண்டும். அதுவரை உள்ளாட்சி தேர்தல் நடத்த இடைக்கால தடை விதித்து உத்தரவிட வேண்டும். இவ்வாறு கூறியிருந்தார். இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.மதி, ஆர்.விஜயகுமார் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில், 2024ம் ஆண்டு நீதிமன்றத்தில் அரசு உறுதி அளித்தது தொடர்பான வழக்கின் உத்தரவு நகல் தாக்கல் செய்யப்பட்டது.

இதையடுத்து நீதிபதிகள், ''உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் வாக்காளர்களின் புகைப்படங்கள் இடம் பெற்று இருப்பதை உறுதி செய்வதோடு, வார்டுகள் ஒதுக்கீடு குறித்த முடிவு செய்ய வேண்டும். அதன் பின்னர் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுக்கான காலியிட பட்டியலை வெளியிட வேண்டும்'' என கூறி 9 மாவட்டங்களுக்கான உள்ளாட்சி காலியிடத்திற்கான இடைத்தேர்தலை நடத்த இடைக்கால தடை விதித்து உத்தர விட்டு விசார ணையை 4 வாரங்களுக்கு ஒத்திவைத்தனர்.

# 2026 தேர்தல் கூட்டணி குறித்து கடலூர் மாநாட்டில் அறிவிக்கப்படும்: பிரேமலதா

நாமக்கல், மே.23-

கடலூர் மாவட்டத்தில் நடைபெறும் தேமுதிக மாநாட்டில் யாருடன் கூட்டணி என்பது குறித்து அறிவிக்கப்படும் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா கூறியுள்ளார்.

நாமக்கல்லில் தேமுதிக கொள்கை விளக்க பொதுக்கூட்டம் இன்று நடைபெற்றது. இதில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா கலந்து கொண் டார். இதைத் தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: 2026 சட்டப்பேரவை தேர்தலில் தேமுதிகவின் நிலைப்பாடு குறித்து ஏற்கனவே தெளிவுப்படுத்தி விட்டோம். கட்சியின் வளர்ச்சிக்கு மட்டுமே நாங்கள் முக்கியத்துவம் கொடுத்து செயல்பட்டு வருகிறோம்.

வரும் ஜனவரி மாதம் 9ம் தேதி கடலூர் மாவட்டத்தில் தேமுதிக மாநாடு நடத்தப்பட உள்ளது. அந்த மாநாட்டில் யாருடன் கூட்டணி ?, எத்தனை தொகுதி ?, கட்சியின் வேட்பாளர்கள் யார் ? என்பது குறித்து அறிவிக்க உள்ளோம். அதற்கு முன்பாக 234 தொகுதிகளிலும் தொகுதி பொறுப்பாளர்களை அறிவித்து, அதற்கான பணிகளை தொடங்க உள்ளோம். அதனைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் நான் மற்றும் விஜய பிரபாகர் ஆகியோர் சுற்றுப்பயணம் செய்து நேரடியாக தேமுதிக தொண்டர்களையும் மக்களையும் சந்திக்க உள்ளோம்.

அரக்கோணம் பகுதியில் கல்லூரி மாணவி ஒருவரை திமுக பிரமுகர் பாலியல் வன்கொடுமை செய்ததாக புகார் எழுந்துள்ளது. தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான இதுபோன்ற பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்துவிட்டன. அதனை திமுக அரசு தடுக்க தவறிவிட்டது.



சமீபத்தில் பொள்ளாச்சி பாலியல் வழக்கின் மீதான தீர்ப்புக்கு நான் தலை வணங்குகிறேன். இன்றைய காலகட்டத்தில் பெண்களை தவறாக பயன்படுத்துகின்ற நிலை நிச்சயம் மாற வேண்டும். பெண்கள் மீதான குற்றச் சம்பவங்கள் அதிகரிக்க மது, கஞ்சா, வேலையின்மை போன்றவை காரணங்களாக உள்ளன.

இளைஞர்கள் தவறான பாதையில் செல்கின்றனர். அரக்கோணம் பாலியல் புகார் சம்பவத்தில் திமுக நிர்வாகியை அந்த கட்சி பதவியில் இருந்து நீக்கினால் மட்டும் போதாது, கடுமையான தண்டனை வழங்க வேண்டும். அப்போதுதான் இதுபோன்ற சம்பவங்களுக்கு நிரந்தர மான தீர்வு காண முடியும். எனவே ஒட்டுமொத்த பெண்களின் சார்பாக இதுபோன்ற செயல்களை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்.

இந்த சம்பவத்தில் ஆளுங்கட்சியின் ஆதரவோடு தவறு செய்தவர், இப்போது இல்லை என்றாலும், இன்னும் சில மாதங்களில் கட்டாயம் தண்டனை பெறுவார்.

ஏற்கனவே, மத்திய அரசு நடத்திய நிதி ஆயோக் கூட்டங்களில் திமுக அரசின் அமைச்சர்கள் கலந்து கொண்டார்கள். சில கூட்டத்தில் அனுமதி அவர்களுக்கு கிடைக்கவில்லை. ஆனால் இப்போது, மத்திய அரசின் ரூ.2,261 கோடி கல்வி உதவி தொகையை பெறுவதற்காக முதல்வர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதாக கூறுகிறார். மத்திய அரசிடம் இருந்து தமிழகத்திற்கு வர வேண்டிய நிதியை பெற்று வருகிறாரா?, இல்லை தன்னுடைய சுய லாபத்திற்காக, கட்சியின் லாபத்திற்காக செல்கிறாரா ? என்பதை நாம் பொறுத்திருந்து பார்ப்போம்.

அமலாக்கத் துறை, தமிழக டாஸ்மாக் ஊழல் குறித்து சோதனைகளை நடத்தி வருகின்ற நேரத்தில், அதில் சம்பந்தப்பட்டவர்கள் வெளியூர் சென்று விட்டதாக கூறுகின்றனர். ஆகாஷ் பாஸ்கர் என்பவருக்கு சம்மன் வழங்கப்பட்டுள்ளது. அவர் 4 திரைப்படங்களை எடுப்பதாக அட்வான்ஸ் கொடுத்தவர்களிடமும் விசாரணை நடைபெறும். மக்கள் பணத்தை ஊழல் செய்த யாரும் இனி தப்பி விட முடியாது. தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் தண்டனை பெறுவார்கள் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை" என்று அவர் கூறினார். இதனிடையே, செய்தியாளர்கள் சந்திப்பில், கட்சியின் நாமக்கல் மாவட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



# குரோம்பேட்டை குமரன் குன்றம் அருகே மூத்த குடிமக்கள் நலசங்கம் சார்பில் விழிப்புணர்வு தெருமுனை கூட்டம்

குரோம்பேட்டை, மே.23-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டை குமரன்குன்றம் பெரியார் சாலை அருகே மூத்த குடிமக்கள் நலசங்கம் சார்பில் விழிப்புணர்வு தெருமுனை கூட்டம் மூத்த குடிமக்கள் நலசங்க தலைவர் மீனாட்சி சுந்தரம் தலைமையில் பொருளாளர் கண்ணன், பழனி, செல்வகுமார் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.தன்சிங், சமூக ஆர்வலர் கோவிந்தராஜன், முன்னாள் நகரமன்ற உறுப்பினர் சண்முகம், முன்னாள் காவல்துறை கிருஷ்ணமூர்த்தி, நலசங்க நிர்வாகி, கட்டிட கலை நிபுணர் ராதாகிருஷ்ணன் உட்பட மூத்த நலசங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு தாம்பரம் மாநகராட்சி நிர்வாகத்தை கண்டித்தும், தமிழக அரசின் நிர்வாக சீர்கேட்டை கண்டித்தும், தாம்பரம் மாநகராசி அனைத்து பகுதிகளிலும் பணிகள் சரிவர முடியாததை கண்டித்து சிறப்புரையாற்றினர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தன்சிங் பேசுகையில் ஆட்சி நடத்துபவர்கள் சரியாக இருந்தால்தான் உள்ளாட்சி நடத்துவர்கள் சிரியாக இருப்பார்கள் எனவும் தமிழகத்தில் நல்லாட்சி நடைபெற்ற அதிமுக பொதுசெயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களை முதலமைச்சராக்க வேண்டும் என கேட்டு கொண்டார். இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



# சாரணர், சாரணியர் பயிற்சி முகாம்

குன்னூர், மே,23-

குன்னூர் அருகே உள்ள ஸ்டான்லி பார்க் பகுதியில் செயல்பட்டு வரும் சாரணர், சாரணியர் இந்த ஆண்டிற்கான பயிற்சி முகாம் நடந்து வருகிறது. இதில் ஆசிரியர்களுக்கான துவக்க பயிற்சி முகாமில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பங்கேற்று அவர்களுடன் கலந்துரையாடினார். இதில் தமிழகம் மட்டுமல்லாமல் தெலுங்கானா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களை சேர்ந்த 80 மாணவ மாணவியர் கலந்து கொண்டனர். மேலும் இந்த முகாமில் ஆசிரியர்களுக்கு உண்டான சிறப்பு பயிற்சி வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவை பாதுகாக்க ரூ.15 லட்சம் கோடியில் ‘கோல்டன் டோம்’ ஏவுகணை பாதுகாப்பு அமைப்பு: அதிபர் ட்ரம்ப் அறிவிப்பு




வாஷிங்டன், மே.23-

அமெரிக்காவை ஏவுகணை தாக்குதலில் இருந்து பாதுகாக்க “கோல்டன் டோம்“ திட்டம் 175 பில்லியன் டாலர் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.15 லட்சம் கோடி) மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெள்ளை மாளிகையில் கூறியதாவது: வெளிநாட்டு அச்சுறுத்தல்களில் இருந்து அமெரிக்காவை பாதுகாக்கும் நோக்கில் “ கோல்டன் டோம்“ திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இந்த புதிய ஏவுகணை பாதுகாப்பு திட்டத்துக்கு ஒட்டுமொத்தமாக சுமார் 175 பில்லியன் டாலர் செலவு ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. முதல் கட்டமாக இத்திட்டத்திற்கு 25 பில்லியன் டாலரை ஒதுக்கீடு செய்யும் மசோதா முன்மொழியப்பட்டுள்ளது. எனது பதவிக் காலம் முடிவதற்குள் இந்த கோல்டன் டோம் திட்டத்தை செயல்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என்பதே எனது இலக்கு.

கோல்டன் டோம் திட்டத்தில் சேர கனடாவும் ஆர்வம் காட்டியுள்ளது. இந்த முயற்சியில் அமெரிக்கா அதன் வடக்கு அண்டை நாடுகளை ஆதரித்து செயல்படும்.

தேர்தல் பிரச்சாரத்தின் போது அமெரிக்க மக்களுக்கு அதிநவீன ஏவுகணை பாதுகாப்பு கேடயத்தை உருவாக்குவேன் என்று உறுதியளித்திருந்தேன். தற்போது அதை நான் செயல்படுத்தியுள்ளேன். இவ்வாறு ட்ரம்ப் தெரிவித்தார்.

கோல்டன் டோம் திட்டம், நாட்டு க்குள் ஊடுருவும் ஏவுகணைகளைக் கண்டறியவும், கண்காணிக்கவும் மற்றும் இடைமறித்து அழிக்கவும் திறன் கொண்ட செயற்கைக்கோள் அடிப்படையிலான வலையமைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது. ஏவுகணை கண்காணிப்பு மற்றும் பதிலடிக்காக அர்ப்பணிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான செயற்கைக்கோள்களை நிலைநிறுத்துவதை இந்த அமைப்பு உள்ளடக்கியிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

# மாங்காடு பட்டூரில் சாலை விரிவாக்க பணி கடைகளை அகற்ற வியாபாரிகள் பொதுமக்கள் எதிர்ப்பு

மாங்காடு, மே.23-

காஞ்சிபுரம் மாவட்டம், மாங்காடு அருகில் உள்ள பட்டூர் பகுதியில் மாங்காடு முதல் மவுலிவாக்கம் வரை செல்லும் சாலை விரிவாக்க பணிகளுக்காக சாலையின் இருபுறமும் உள்ள கடைகளை அகற்ற சம்பந்தப்பட்ட அரசு துறை அதிகாரிகள் காலை சம்பவ இடத்திற்கு ஜேசிபி பொக்லைன் இயந்திரத்துடன் வந்தனர்.

பட்டூர் பள்ளிவாசல் தலைவர் சாலிக் பாஷா, ரஃபீக், அகமது உசேன், குன்றத்தூர் முன்னாள் எம்எல்ஏ பழனி, எஸ்.டி.பி.ஐ கட்சி மாவட்ட தலைவர் நசுருதீன், தமுமுகவின் காஞ்சிபுரம் மாவட்ட தலைவர் சலீம் கான், பட்டூர் பகுதியில் உள்ள சாலையின் இரு புறமும் கடை வைத்து வியாபாரம் செய்து கொண்டு வரும் வியாபாரிகள் கடைகளை அகற்ற எதிர்ப்பு தெரிவித்து அரசு அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் இதனால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.




அசம்பாவித சம்பவம் ஏதும் நடைபெறாமல் இருக்க காவல்துறையினர் ஏராளமாக குவிக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

சாலை விரிவாக்க பணிகளுக்காக கடையின் முன்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த மேற்கூரைகளை ஜேசிபி எந்திரம் மூலம் அதிகாரிகள் அகற்றினர்.

இதனால் வியாபாரிகளுக்கும் அரசு அதிகாரிகளுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டு தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

வியாபாரிகளின் எதிர்ப்பை மீறி அரசு அதிகாரிகள் கடை ஆக்கிரமிப்புகளை அகற்றினர்.

ஏற்கனவே சாலை துறை சார்பில் அளவிடப்பட்ட பகுதி முழுவதும் சாலை விரிவாக்க பணிகளுக்காக கடைகள் இடிக்கப்படும் என உறுதியாக அரசு அதிகாரிகள் தெரிவித்து கடைகளை அகற்றும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இது குறித்து அந்தப் பகுதியில் கடை வைத்திருக்கும் பட்டு. பாண்டியன் என்பவர் கூறுகையில்

மாங்காடு மதுரா பட்டூர் வன்னியர் குல சத்திரியர் நல்வாழ்வு அறக்கட்டளைக்கும், விநாயகர் கோவில், ஸ்ரீ பச்சையம்மன், ஜோதிமன்னார் கோவில்களுக்கு சொந்தமான நஞ்சை, பட்டா நிலம், சர்வே எண் 433/1-B, பட்டா எண் 479, உள்ள 51செண்ட் நிலத்தில் 1500 சதுர அடி இடத்தில் 35 ஆண்டுகளுக்கு முன்பு ஐந்து கடைகள் அமைத்து, அந்த கடைகள் வாடகை விடப்பட்டு அந்த வருமானத்தைக் கொண்டு எங்கள் சங்க வளர்ச்சிக்கு பயன்படுத்தி வருகிறோம்.

தற்போது சாலை விரிவாக்க பணிகள் எனச் சொல்லி பட்டா நிலத்தில் உள்ள எங்களது ஐந்து கடைகளை முழுவதுமாக இடிக்க அதிகாரிகள் அளவீடு செய்துள்ளனர்.

பட்டா நிலத்தில் உள்ள கடைகளை எடுக்கக் கூடாது.

அப்படி சாலை விரிவாக்க பணிகளுக்கு அரசு எடுத்துக் கொண்டால் அதற்கு முறையாக இழப்பீடு வழங்க வேண்டும்.

இழப்பீடு தர முடியாது என அதிகாரிகள் கூறுகின்றனர். காரணம் கேட்டால் தற்போது இந்த இடம் கிராம நத்தத்திற்கு உட்பட்டது என கூறுகின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கும், காஞ்சி மாவட்ட ஆட்சியருக்கும் மனு அளித்துள்ளோம், நாங்கள் அளித்த மனு மீது எந்த ஒரு நடவடிக்கையும் அரசு அதிகாரிகள் எடுக்கவில்லை.

அதற்குள்ளாக இன்று திடீரென ஜேசிபி இயந்திரங்களுடன் கடைகளை இடிக்க வந்துள்ளனர். எங்களுக்கு உரிய நியாயம் வேண்டும். சாலை விரிவாக்க பணிகளுக்கு நாங்கள் எதிர்க்கவில்லை, பட்டா இடத்தில் உள்ள கடைகளை இடித்தால் அதற்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என கேட்கிறோம்.

இழப்பீடு தரவில்லை என்றால் நாங்கள் எப்படி கடைகளை இடிக்க அனுமதிப்பது என தெரிவித்தார்.



■ சிவகங்கை மாவட்டத்தில் பல்வேறு தனியார் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக சிங்கம்புணரிக்கு நேற்று (மே22) வருகை தந்துள்ள தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியை சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜீத் மலர் கொத்து வழங்கி வரவேற்றார்.உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத், தேவகோட்டை சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ் உட்பட பலர் உடனிருந்தனர்




■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி அரசகுழி மயானம் செல்லும் சாலையில் (7542)அரசு மதுபான கடை செயல்பட்டு வருகிறது. நேற்று முன்தினம் வழக்கம் போல பணியாளர்கள் இறுதி இருப்பை கணக்கெடுத்து விட்டு கடையை அடைத்துச் சென்றனர்.நள்ளிரவு நேரத்தில் 11.50 மணியளவில் அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் கடையின் முன் ஷட்டரை உடைத்து மது பாட்டில்களை மற்றும் இருப்பில் இருந்த பணம் ஆகியவற்றை கொள்ளையடித்து சென்றுள்ளனர். மேலும் அங்கிருந்து தடயங்கள் சேகரிக்கப்படாமல் இருப்பதற்கு கடையை தீயிட்டுக் கொளுத்தி 23 லட்சம் மதிப்பீட்டில் ஆனா மதுபான பாட்டில்கள் தீயில் எறிந்தது . மதுபான கடையில் இருந்த அலாரம் கூச்சலிடவே காவல்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது பின்னர் தீயணைப்புத் துறையினர் மூலம் தீ அணைக்கப்பட்டது. இந்த மர்ம செயலில் ஈடுபட்ட நபர்களை மானாமதுரை காவல்துறையினர் தேடி வருகின்றனர்.

### தாம்பரம் சேலையூரில் பில்டர்ஸ் அசோசியேசன் ஆப் இந்தியா தாம்பரம் மையம் சார்பில்

# சிவில் பொறியாளர்கள் மற்றும் கட்டிடக்கலை நிபுணர்களுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு முகாமில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்

சேலையூர், மே.23-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சேலையூரில் உள்ள பாரத் பல்கலைகழகத்தில் பில்டர்ஸ் அசோசியேசன் ஆப் இந்தியா தாம்பரம் மையம் சார்பில் சிவில் பொறியாளர்கள் சிறப்பு வேலை வாய்ப்பு முகாம் சேலையூரில் பில்டர்ஸ் அசோசியேசன் ஆப் இந்தியா தாம்பரம் மையத் தலைவர் ராபர்ட் லிவிங்ஸ்டன் தலைமையில் தாங்கினார். வேலைவாய்ப்பு முகாம் கமிட்டி தலைவர் கோமதி சங்கர், துணை தலைவர் கணேச சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முகாமிமை பாரத் பல்கலைகழக இயக்குனர் கோகுல் சந்தர் முகாமை தொடங்கி வைத்தார்.




கொரோனாவிற்கு பின் கட்டுமான தொழில் சரிவால் சிவில்பொறியியல் படிப்பிற்கான மாணவர்கள் இடையே கடந்த சில ஆண்டுகளாக ஆர்வம் குறைந்து வரும் சூழ்நிலையில் கட்டுமான துறையில் உள்ள சிறப்பான வேலை வாய்ப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த வேலை வாய்ப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.


நாட்டின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றும் கட்டுமான துறையின் வளர்ச்சிக்கு அரசாங்கமும் கட்டுமான பொறியியல் படிப்பை தேர்வு செய்யும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் நடந்த முகாமில் நூற்றுக்கும் மேற்பட்ட சிவில் பொறியாளர்கள் மற்றும் கட்டிட கலை நிபுணர்கள் கலந்து கொண்டனர். இதில் 22 கட்டுமான நிறுவனங்கள் கலந்து 52 மாணவர்களை தேர்ந்தெடுத்தனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ. காமராஜ் பணி ஆணை வழங்கி மாணவர்களை பாராட்டினார்.

பில்டர்ஸ் அசோசியேசன் ஆப் இந்தியா தாம்பரம் மைய செயலாளர் ராஜசேகர், துணை தலைவர் சுப்பிரமணியன், பொருளாளர் கந்தசாமி, துணை செயலாளர் தினேஷ்குமார் ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# விடுமுறை நாளில் வழக்கறிஞர்கள் வேலை செய்ய விரும்புவதில்லை: தலைமை நீதிபதி வேதனை

புதுடெல்லி, மே.23-

விடுமுறை நாட்களில் வழக்கறிஞர்கள் வேலை செய்ய விரும்புவதில்லை என தலைமை நீதிபதி வேதனை தெரிவித்துள்ளார். உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் மற்றும் நீதிபதி அகஸ்டின் ஜார்ஜ் மாசிஹ் அமர்வு முன்பு நேற்று வழக்கு ஒன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, வழக்கறிஞர் ஒருவர் கோடை விடுமுறைக்குப் பிறகு மனுவை பட்டியலிடுமாறு நீதிபதி அமர்விடம் வலியுறுத்தினார்.



இதைக்கேட்டு கோபம் அடைந்து தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் கூறியதாவது: வழக்கறிஞர்கள் கோடை விடுமுறை நாட்களில் வேலை செய்ய விரும்புவதில்லை. ஆனால், வழக்குகள் தேங்குவதற்கு நீதித் துறை தான் காரணம் என்று பொத்தம் பொதுவாக குற்றம்சாட்டப்படுகிறது.


முதல் ஐந்து நீதிபதிகள் விடுமுறை அமர்வில் தொடர்ந்து பணியாற்றுகிறார்கள். ஆனால், வழக்கு நிலுவையில் உள்ளதற்கு நாங்கள் தான் காரணம் என்கின்றனர். உண்மையில் விடுமுறை நாளில் வேலை செய்ய விரும்பாத வழக்கறிஞர்கள்தான் அதற்கு காரணம். இவ்வாறு பி.ஆர்.கவாய் தெரிவித்தார்.

# கள்ளழகருக்கு ரூ.1 கோடி காணிக்கை செலுத்திய பக்தர்கள்

மதுரை, மே.23-

கள்ளழகர் கோயில் சித்திரைத் திருவிழா நாட்களில் பக்தர்கள் காணிக்கையாக ரூ.1 கோடி செலுத்தி உள்ளனர்.

மதுரை அழகர்கோவில் கள்ளழகர் கோயில் சித்திரை திருவிழா மே 8ம் தேதி முதல் மே 17ம் தேதி வரை நடந்தது. இதில் கள்ளழகர் மதுரைக்கு மே 10ம் தேதி புறப்பட்டபோது அவருடன் 39 தள்ளு வண்டி உண்டியல்கள் வந்தன. இதில் வழி நெடுகிலும் பக்தர்கள் காணிக்கைகளை உண்டியல்களில் செலுத்தினர்.



பின்னர் மே 16ம் தேதி கள்ளழகர் மலைக்கு திரும்பினார். அவருடன் 39 தள்ளுவண்டி உண்டியல்களும் கோயிலுக்கு திரும்பின. அந்த வகையில் சித்திரைத் திருவிழாவில் மட்டும் பக்தர்கள் செலுத்திய காணிக்கை உண்டியல்கள் எண்ணும் பணி புதன்கிழமை நடைபெற்றது. கோயில் துணை ஆணையர் யக்ஞ நாராயணன் தலைமையில் கூடலழகர் கோயில் உதவி ஆணையர் பிரதீபா முன்னிலையில் .காணிக்கை எண்ணும் பணி நடந்தது. இதில் ஆய்வர் சாவித்திரி, கோயில் கண்காணிப்பாளர்கள் பாலமுருகன், அருணாதேவி, பிஆர்ஓ முருகன் மற்றும் அறங்காவலர்கள், கோயில் பணியாளர்கள், வங்கிப் பணியாளர்கள் ஈடுபட்டனர். இதில் காணிக்கையாக ரூ.1 கோடியே 6 லட்சத்து 78 ஆயிரத்து 47 ரொக்கம், 9 கிராம் நகைகள், 55 கிராம் வெள்ளிப்பொருட்கள் கிடைக்கப்பெற்றன.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161